சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**<u>ஆணை நாள் 06.07.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**<u>வழக்கு எண். SA 9697/E/2024</u>**

திரு.S.சிவசூரியன் நாடார் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தனி வட்டாட்சியர்,
நகர நிலவரித் திட்ட அலுவலகம், பொது அதிகார அமைப்பு
திருவொற்றியூர் வட்டம்,
சென்னை மாவட்டம்-19.

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.S.சிவசூரியன் நாடார் அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திரு.வே.ஞானப்பிரகாஷ், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருவொற்றியூர் வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 18.05.204 |
| **<u>கோரிய தகவல்</u>**, சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், சாத்தாங்காடு கிராமம், ward-D, Block-14, TS no.10, அதை சுற்றியுள்ள T.S.No.4, 5, 11, 12, 15 கடந்த 08.05.2024 மற்றும் 17.05.2024 தேதிகளில் நில அளவீடு பணிகள் நடத்தப்பட்டதாக பொருளில் குறிப்பிட்டு, TS No.10, சப்டிவிசன் 10/1-ல் உள்ள சாலைகள் அளவீடு செய்யப்பட்டு கல் நடப்பட்டதா அதன் முழு விபரம், TS No.10/2 முதல் 10/15 வரை சப்டிவிஷன்களில் ஏற்கனவே நில அளவீடு செய்யப்பட்டு தனி சப்டிவிஷன் பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் பெயர் மற்றும் அதன் முழு விபரம் உள்ளிட்ட 17 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், தனி | |

| | |
|---|---|
| வட்டாட்சியர், நகர நிலவரித் திட்ட அலுவலகம், பூந்தோட்ட தெரு, திருவொற்றியூர், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | ---- |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 21.06.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 22.07.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் மனுதாரருக்கு வழங்கப்பட்டு மனுதாரர் 03.07.2026 தேதியிட்டு ஏற்பளிப்பு கடிதம் அளித்துள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், மனுதாரர் தனது 03.07.2026 தேதியிட்ட எழுத்து மூலமான கடிதத்தில் சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், சாத்தாங்காடு கிராமம், வார்டு-D, பிளாக்-K, பழைய புல எண்.308/3 நகர புல எண்.11/2, 11/5, 11/8 தொடர்பான மனைகளுக்கு தான் கோரிய தகவல்களை பெற்றுக்கொண்டதாக தெரிவித்துள்ளதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிரப்படுகிறது**.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 9697/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவொற்றியூர் வட்டம், சென்னை மாவட்டம்-19.

**மேல்முறையீட்டாளர்**

திரு.S.சிவசூரியன் நாடார், த/பெ.S.சிவராஜ் நாடார்,
தபால் பெட்டி எண்.5520,
தண்டையார்பேட்டை, சென்னை- 600 081.

Copy to: File MP/PA-